பக்கங்கள் 6 விலே சதம் 40

# ஈழநாடு

The EELANADU

Registered as a Newspaper at the General PostOffice Sri Lanka under No QB/8945/78

மலர்: 21 வைகாசி: 29 றஜப்: 16 இதழ்: 113

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 12 6 79

# பொல்காவலேயில் சரக்கு வண்டி தடம்புரண்டது!

## வடபகுதிரயில்சேவைபாதிப்பு

(யாழ்ப்பாணம்)

பொல்காவலே ரயில் நிலேயத் துக்கண்மையில் நேற்றுக் காலே சரக்கு ரயில் ஒன்று தடம் புரண்டதை அடுத்து வடபகுதி யில் ரயில்சேவைகள பாதிக்கப் பட்டுள்ளன.

நேற்றுக்காலே 8-30 மணிய ளவில் மட்டக்களப்பிலிருந்து கொழும்புக்குச் சென்ற சரக்கு ரயிலே தடம்புரண்டது.

இதையடுத்து காங்கேசன் துறை, மன்னர், மட்டக்க ளப்பு, அனுராதபுரம் ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டுள் ளன. இதனல் குருநாகலுக்கும் பொல்காவலேக்குமிடையே பிரயாணிகள் பஸ்மூலம் பய ணம் செய்கிறர்கள்.

நேற்றுக்காலே காங்கேசன் துறையிலிருந்து கொழும்புக் குச் சென்ற இரு கடுகதி ரயில் களும் குருநாகல் வரை சென்று அங்கிருந்து கொழும்பிலிருந்து வந்த பிரயாணிகளுடன் திரும்பிவந்தன. (இ)

# செங்கலடி வங்கி கொள்ளேயை பொலிசார் ஏற்கனவே அறிவர்

# 9மைல்துரத்தி பணத்துடன் கொள்ளேயரை மடக்கினர்

## மேல் நீதிமன்றத்தில் அரச சட்டத்தரணி

(கொழும்பு)

செங்கலடி கிராமிய வங்கி யில் கொள்ளே நடைபெற இருப்பதை ஏற்கனவே அறிந்துகொண்ட பொலிசார் கொள்ளேயர்களே மடக்கிப் பிடிக்க தயாராக இருந்து கொள்ளே இடம்பெற்றபின் னர் அவர்களேப் பின் தொடர்ந்து சுமார் 9 மைல் தூரம் சென்று கொள்ளேப் பணத்துடன் அவர்களே மடக் கினர்.

இவ்வாறு செங்கலடி கிரா மியவங்கிக் கொள்ளே வழக்கு விசாரணையின்போது அரச தரப்பு வழக்கறிஞர் திரு. வி. எஸ். குணசேகரா தெரிவித் தார்.

இவ் வழக்கு நேற்றுக் காலே கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி திரு. எல். எச். த சில்வா முன்னிலேயில் விசா ரணேக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

இவ் வழக்கில் இராமலிங் கம் பரமதேவா (1ம் எதிரி), வேலும்மயிலும் விஜயசுந்தரம் (2ம் எதிரி), கனகரத்தினம் ரஞ்சன் (3ம் எதிரி) வாம தேவன் ஆகிய நால்வர்மீதும் செங்கலடி கிராமிய வங்கியில் 11-3-78ம் திகதி ஒரு லட் சத்து 77 ஆயிரத்து 300 ரூபாவைக் கொள்ளேயடித்த தாகவும் கார் ஒன்றைக் கொள்ளேயடித்ததாகவும் பயங்கர ஆயுதங்களேக் கொண்டு கொள்ளேயடித்ததாகவும் குற் றம்சாட்டப்பட்டுள்ளது!

இவர்கள் நால்வரும் தாம் சுற்றவாளிகள் எனத் தெரி வித்தனர்.

எதிரிகள் சார்பில் சட்டத் தரணி திரு. எம். சிவசிதம் பரம், சட்டத்தரணிகள் திருவாளர்கள் எஸ் ஸி சந்திர காசன், எஸ் உருத்திர மூர்த்தி ஆகியோர் ஆஜராகி னர்.

அரசு தரப்பில் திருவாளர் கள் வி பி எஸ் குணசேகரா, பி சுப்பிரமணியம், ரஞ்சித் பெரேரா ஆகியோர் ஆஜ ராகினர்.

அரச சட்டத்தரணி திரு. குணசேகரா நீதிமன்றத்தில் மேலும் கூறியதாவது:

குறிப்பிட்ட வங்கியின் மனேஜர் காசுப் பையுடன் வரும்போது பணத்தை கொள்ளேயடிக்க எதிரிகள் திட்டமிட்டிருந்ததை பொலி சார் ஏற்கனவே அறிந்திருந் தனர்: இதன்படியே பொலி சார் காத்திருந்து 9 மைல் தூரம்வரை விரட்டிச்சென்று எதிரிகள் முன்பு கொள்ளே யடித்த பணமான 1,77,300 ரூபாவுடன் கைதுசெய்தனர். இதில் வாமதேவன் தப்பி ஓடிவிட்டார். இதற்குக் கண்ணுல் கண்ட சாட்சியமும் நிபுணத்துவ சாட்சியமும் உண்டு.

### சட்டவைத்திய அதிகாரி சாட்சியம்

சட்டவைத்திய அதிகாரி டாக்டர் ஆறுமுகம் பொன்

(5ம் பக்கம் பார்க்க)

ஊழியர்கள், மக்கள்

## கண்ணீர்சிந்த 'லயனல்' பிரியாவிடை



(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட அரசாங்க அதிபராக மிகக் குறுகிய காலமே கடமையாற்றிப் பொதுமக்களினதும் அரசாங்க ஊழியர்களினதும் அன்பை யும் அபிமானத்தையும் சம் பாதித்துக்கொண்ட திரு. லயனல் பெர்னுண்டோ நேற் றுக்காலே புதிய அரசாங்க அதி பர் திரு. டி. எம். ஆரியரத் தினவிடம் பொறுப்புக்களே ஒப்படைத்தபோது கச்சேரி ஊழியர்களும் அங்கு வந்த பொதுமக்களும் கண்ணீர் வடித்தனர்.

கொழும்புக்கு இடமாற்ற லாகிச் செல்லும் திரு. லயனல் பெர்னுண்டோ நேற்று கச்சேரி ஊழியர்களிடம் பிரியாவிடை பெற்றபோது பலர் பிரிவாற் ருது அழுதனர். திரு லய னல் பெர்னுண்டோ நேற்று பிற் பகல் கொழும்புக்குப் பயண மாஞர்.

மாநகரசபை

### தேனீர் விருந்து

இடமாற்றலாகிச் செல்லும் திரு. லயனல் பெர்னுண்டோ வுக்கு யாழ்ப்பாண மாநகர சபை விரைவில் தேநீர் விருந்தளித்துப் பிரியாவிடை கூறவிருக்கிறது.

## கார்விபத்தில் இளேப்பாறிய ஆசிரியர் பலி!

(யாழ்ப்பாணம்)

சரசாலேயில் நேற்று மாலே நடந்த கார் விபத்தொன்றில் இளேப்பாறிய ஆசிரியர் ஒருவர் பலியாஞர்

காரை ஓட்டிவந்த சரசாலே யைச் சேர்ந்த சங்கரப்பிள்ளே இராசையா என்பவரே கார் மின்கம்பத்தில் மோதியதை அடுத்து ஆஸ்பத்திரிக்கு எடுத் துச் செல்கையில் மரணமாஞர்

## மெக்ஸிக்கோவில் மன்னர் ஷா

மெக்ஸிக்கோநகர், ஜூன் 11

முன்னுள் ஈரானிய மன்ன ரும் ஈரானிய புரட்சிகரசிஞல் மரணதண்டனே விதிக்கப்பட்ட வருமான ஷா இன்று பஹமாஸிலிருந்து மெக் ஸிக்கோ வந்துசேர்ந்தார்.

மனேவியுடனும் மூத்த மகனுடனும் மெக்ஸிக்கோ வங்கியின் விசேட விமானத் தில் வந்த இவர் மெக்ஸிக் கோவின் தென்பகுதியில் உள்ள வாடி வீட்டில் இரகசியமாக வைக்கப்பட்டிருக்கலாம் என கூறப்படுகிறது.

மன்னர் ஷாவின் மாளிகை ஒன்றும் இங்குண்டு

இவருக்கு 6 மாத உல்லாசப் பயணிகள் விசா மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளது. (இ)

# "கனிவளமுள்ள ஒரு 'குட்டி அரேபியா' நெடுந்தீவு!"

## திருக்குறள் மாநாட்டில் ஆறு. அழகப்பன்



(நெடுந்தீவு)

"தமிழர்களுடைய பாரம் பரியங்களேப் பேணிப் பாது காத்துவருகின்ற தமிழ்நாட் டின் நாகரிகத் தொட்டிலாக விளங்குகின்ற நெடுந்தீவிலே வள்ளுவருக்கு விழா எடுப்பது மகிழ்ச்சிக்குரியது. நெடுந்தீவை ஒரு குட்டி அரேபியா என்று தான்சொல்லவேண்டும்; இங்கு மூன்வர் எண்ணே இருக்கலாம் என பரிசோதிக்கப்பட்டதாக நான் அறிகிறேன். தொடர் ந்து இந்த முயற்சியில் ஈடுபட் டால் நிச்சயமாக கனிப் பொருளே இங்கு அடைய லாம்."

இவ்வாறு நெடுந்தீவு மகாவித் தியாலய மாநாட்டரங்கில் நடைபெற்ற தமிழ்மறைக் கழ கத்தின் 19வது திருக்குறள் மாநாட்டின் இரண்டாம் நாள் சிறப்புரையாற்றிய அண்ணு மலேப் பல்கலேக்கழகத் தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் ஆறு அழகப்பன் குறிப்பிட்டார்.

மாநாட்டின் இறுதி நாளான நேற்றுக்காலே பாட சாலே மாணவர்களிடையே நடாத்தப்பட்ட பேச்சு மன னப் போட்டிகள் அருட்திரு. எஸ் ஸி ஆர்னல்ட் தலைமை யில் நடைபெற்றது. மாலே நிகழ்ச்சிகளுக்கு மாநாட்டுச் செயலவைத் தலைவர் திரு இரா சின்னத்தம்பி தலைமை வகித் தார் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவரின் பேச்சைத் தொடர்ந்து திரு. இரா ஜெய ராஜா வரவேற்புரை நிகழ்த் திஞர்

அண்ணுமலேப் பல்கலைக்கழக பழைய மாணவர்கள் சார்பில் பேராசிரியர் அழகப்பனுக்கு பாராட்டுப்பத்திரம் ஒன்றை அவரது மாணவன் திரு. வி.

(6ம் பக்கம் பார்க்க)

## கம்யூ. கட்சியிலிருந்து மூவர் இடைநிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து திருவாளர் பி. ஜெ. அன்ரனி, எஸ். இராசையா, மு வடிவேலு ஆகியோர் கட்சி ஒழுங்கு விதி களுக்கமைய கட்சி அங்கத் துவத்திலிருந்து இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் நடந்த கம்யூனிஸ்ட் கட்சி யாழ். மாவட்ட குழுக் கூட்டத்தில் இம்மூவரையும் இடைநிறுத் தும் தீர்மானம் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி யில் அங்கத்தவராக இருந்து கொண்டே அதன் கோட்பாடு களுக்கும், தீர்மானங்களுக் கும் மாறக ஒரு குழுவாக இயங்கி பிறிதொரு கட்சியை உருவாக்கத் தொடர்ந்த முயற்சிகளே மேற்கொண்டி ருப்பதனலேயே இம்மூவரும் இடைநிறுத்தம் செய்யப்பட் டுள்ளதாக கம்யூனிஸ்ட் கட்சி யாழ். மாவட்ட காரியதரிசி திரு. அ. வைத்திலிங்கம் தெரி வித்தார்.

கட்சி அங்கத்துவத்தி லிருந்து ஏன் நீக்கப்படக் கூடாது என்பதற்குக் கார ணம் காட்டும்படி அம்மூவரும் கேட்கப்பட்டுள்ளனர். (ஈ)

# "நல்லாட்சிக்குரிய கருத்துக்களை உள்ளடக்கிய நூல் திருக்குறள்"

## நெடுந்தீவு திருக்குறள்மாநாட்டில் பண்டிதர்

[நெடுந்தீவு]

"சாதி சமய இன வேறுபாடு களைக் களைந்து ஒரு பொது நூலுக்கு விழாஎடுப்பதென்றால் அந்தப் பெருமை திருக்குறளையேசாரும். திருக்குறள் தனிமனிதனது வாழ்வை மட்டுமல்ல ஒரு சிறந்த சமுதாயத்தை, நல்லதோர் அரசாட்சியை எந்த நாட்டிலும்நிலை நிறுவுவதற்கு அரிய கருத்துக்களைக்கொண்டுள்ளது"

இவ்வாறு தமிழ்மறைக் கழகத்தின் 19வது திருக்குறள் மகாநாட்டின் முதல்நாள் நிகழ்ச்சிக்குத் தலைமைவகித்த ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா பொ. இரத்தினம் தமது தலைமையுரையில் குறிப்பிட்டார்.

முதல்நாள் நிகழ்ச்சிகள் திருக்குறள் ஏட்டுச்சுவடிகள் அலங்கரிக்கப்பட்ட டிரக்டர் வண்டியில்வைத்து குதிரைகள் பல முன்அணிவகுத்துச்செல்ல நெடுந்தீவின் கிராமங்கள் ஊடாககொடுத்துச்செல்லப்பட்டு ஊர்வலம் நெடுந்தீவு மகாவித்தியாலய மகாநாட்டரங்கை அடைந்ததும் ஆரம்பமானது கல்லூரி முன்றலில் நிறுவப்பட்ட வள்ளுவரின் உருவச்சிலையை அருட்திரு வி. பிறற் துரைரத்தினம் அடிகளார் திறந்துவைத்தார் வைத்திய கலாநிதி சிவஞானசுந்தரம் (நந்தி) மங்கல விளக்கேற்றி விழாவை ஆரம்பித்துவைத்தார்.

மகாநாட்டுக்குழுத்தலைவரும் நெடுந்தீவு மகாவித்தியாலய அதிபருமான திரு இரா சின்னத்தம்பி வரவேற்புரைநிகழ்த்துகையில்: 'நெடுந்தீவிலேயே ஆதித்தமிழனது முதல் குடியேற்றம் நிகழ்ந்துள்ளது அந்நியர் படையெடுப்பு இலங்கையில் நடைபெற்ற நேரத்திலும் கூட நெடுந்தீவையே போர்த்தளமாக முதலில் கைப்பற்றி மன்னர்க்கடலைக் காவல் செய்தனர். எனவே வரலாற்றுப் பெருமைமிக்க மண்ணிலே திருக்குறள் மாநாடு நடைபெறுவது சாலச்சிறந்தது' என்றார்.

விழாவில் சிறப்புரையாற்றிய அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணைப்பேராசிரியர் டாக்டர் ஆறு அழகப்பன் உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

### ஆறு. அழகப்பன் உரை

"சிறந்த கவிதையை ஒ சதுரம் என்றழைக்கிறோம். சதுரம் என்று நாம் கூறும் போது, அந்தக்கவிதையில், உவமை நயத்தைக் காண்கிறோம். கற்பனையின் திறனை ரசிக்கிறோம். ஓசைநயத்தை பார்க்கிறோம் வர்ணனையைக் கண்டு அதிசயிக்கிறோம். அதனால்தான் சிறந்த கவிதையை, நாலு மூலைகளைக்கொண்ட சதுரத்தைப்போல, கவிதையின் நான்கு இயல்புகளை ரசிக்கிறோம். ஆறடிக் கூந்தலை அள்ளி முடித்து...! கூந்தல் கறுப்பு, குங்குமம் சிவப்பு என்று கவிதையின் இயல்புகள் தவறிய கவிதைகளை வடிப்பவர்கள் கவிஞர்கள் வரிசையிலிருந்து விலகவேண்டும்'

நான் இலங்கைக்குவந்து ஒரு தீவைப் பார்க்கவேண்டுமென்று விரும்பினேன். எனது நண்பர்கள் தீவுகளைப் பார்க்க அழைத்துச் சென்றனர். ஆனால் நெடிய தீவாக, நெடுந்தீவுக்கே அழைத்துவந்திருக்கின்றனர். இத்தீவைப் பசுமைத்தீவு; பசுத்தீவென அழைப்பதுண்டு. இராமேசுவரருக்குப் பால் வழங்கிய தீவாக இது அன்று இருந்தமையால் பசுத்தீவென அழைக்கப்பட்டது.

இராவணன் சீதையைக் கவர்ந்து சென்றவுடன், சீதையைத் தேடி இராமன் நெடுந்தீவுக்கே வந்தான். இதனால் பெருமையடைகிறது நெடுந்தீவு.

எவன் கல்வி கேள்விகளிற் சிறந்து விளங்கினாலும், பெரும் பணமுடையவனானாலும், பிறனுக்கு உரிய பெண்மையை விரும்பாதவனே, பிறன் மனைவியைக் காமத்தோடு நோக்காமல் வாழ்தலே பெரிய ஆண்மையாகும்.

பல்வேறு வகைச் சிறப்புப் பெற்ற இராவணன், தான் செய்த பெருந்தவறாகச் சீதையைக் கவர்ந்துசென்றமையால் ஆண்மையிழந்தவனாகக் கருதப்பட்டான் இதனால் அவனது வீரத்திற்கும், விவேகத்திற்கும் மதிப்பளிக்கப்படவில்லை ஆயிரம் யானைகளைக் கொன்றவன் ஆண்மையுள்ளவனல்ல. பிறன்மனை நோக்காததே ஆண்மை.

சிந்திக்கச்சிந்திக்க சிந்தனையைத் தருவது திருக்குறள். திருக்குறளில் 1330 குறள்கள் இருந்தாலும் ஒவ்வொன்றும் ஒவ்வொரு சிந்தனைக் கருவூலம். கலைஞர்களுக்கு ஒரு கருக் கிடைத்துவிட்டால், ஒரு காவியமே வடித்துவிடுவார்கள். பெருங்காப்பிய நாயகனான இளங்கோவே, தற்காத்துத் தற்கொண்டான்பேணித் தகைசான்ற சொற்காத்து சோர்விலாள் பெண்'' என்ற ஒரு குறளின் கருவைக் கொண்டே சிலப்பதிகாரத்தை 4000 காப்பியங்களின் மகத்துவத்தை உணரமுடியும். இதேவகையில் 1330 புலவர்கள், ஒவ்வொரு குறளிலிருந்து காப்பியம் வடிப்பார்களானால் செம்மொழி தமிழின் சிறப்பு எவ்வளவு பெருகிவிடும்.

இன்று நாட்டில் கம்யூனிஸம் பேசப்படுகிறது மார்க்ஸிசம் கூறப்படுகிறது அதைப் போல, சமத்துவ சிந்தனைகள் நிலைப்பாடு கொண்டிருக்கும் வள்ளுவனிசம் பரப்பப்படும் நாள் வெகுதூரத்திலில்லை அது விரைவில் தமிழ் நாட்டிலே, பரப்பப்படும் என்றார். [செ-கு]

---

## சிறுபான்மைத் தமிழர் விடுதலைமுன்னணி பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

சிறுபான்மைத் தமிழர் விடுதலை முன்னணிப் பொதுக் கூட்டம் இம்மாதம் 23ம் திகதி சனிக்கிழமை நடைபெறவிருக்கிறது.

நல்லூர் ஆசீர்வாதப்பர் கோவில் அருகாமையிலுள்ள சென். பெனடிக்ற் பாடசாலையில் நடைபெறவிருக்கும் இக்கூட்டத்தில், சிறுபான்மைத் தமிழர்கள் வசிக்கும் கிராமங்கள் தோறும் முன்னணிக் கிளைகள் அமைப்பதுபற்றியும், வருடாந்த மாநாடு நடாத்துவதுபற்றியும் ஆலோசிக்கப் படவிருக்கிறது.

இக்கூட்டத்தில் சிறுபான்மைத் தமிழரின் கல்வி, பொருளாதாரம், வீடு, காணிநிலம், வேலைவாய்ப்பு சம்பந்தமாகவும் ஆராயப்படவிருக்கிறது.

---

## பரு. பொலிஸ் நிலையத்திற்கு சக்திமிக்க தொடர்புகருவி

[புலோலி]

பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்திற்குச் சக்திவாய்ந்த புதியவானொலிதொடர்புகருவி பொருத்தப்பட்டுள்ளது.

'மோட்டோ ராலா' என்னும் இவ் வானொலித் தொடர்புகருவி மிக நுண்ணிய செய்திகளையும் கிரகிக்கக்கூடியது

யாழ். மாவட்ட பொலிஸ் அதிபர் திரு. லியோ பெரேரா புதிய வானொலி தொடர்பு கருவியை பொலிஸ் திணைக்களத்திலிருந்து பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தார். [அ]

---

## தலைமறைவானவர் மீண்டும் அங்கொடை செல்கிறார்

[புலோலி]

அங்கொடை மனநோயாளர் வைத்தியசாலையில் இருந்து 'தப்பி நீட்டியவர்' பருத்தித்துறை பொலிசாரிடம் வசமாக மாட்டிக் கொண்டார்.

கரவெட்டியைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை [வயது 31] என்பவரே அங்கொடை மனநோயாளர் வைத்தியசாலையிலிருந்து தலைமறைவானவராவார். பருத்தித்துறைப் பொலிசைச் சேர்ந்த கான்ஸ்டபிள் திரு கிருஷ்ணபிள்ளை இந்நபரைக் கைதுசெய்து பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திரு எம். டி. யேசுரத்தினம் முன்னிலையில் ஆஜர் செய்தார். நீதிபதி இவரை மீண்டும் அங்கொடை மனநோயாளர் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கும்படி உத்தரவிட்டார். [அ]

---

## வரி விளம்பரம்


### விற்பனைக்கு

கூடுதல் பயன் தரக்கூடிய நல்ல இன செவ்விழநி தென்னங்கன்றுகள் விற்பனைக்குண்டு. தொழிற்சாலையில் பெற்றுக்கொள்ளலாம். மிக்க வற் - யாழ்ப்பாணம். 2701

2 ஏக்கர் காணியில் கிணறு 850 ச. அடி வீடும், 3 ஏக்கர் நீர்ப்பாசன வசதியுடன் வயல் கண்டி யாழ்ப்பாண ரோட்டருகில் விற்பனைக்குண்டு. பொ. அப்புத்துரை, பேயாடி கூளாங்குளம், வவுனியா 2724

### தேவை

அப்பளம், கற்பூரம், பற்பொடி தயாரிக்கக் கூடிய அனுபவம் வாய்ந்தவர்கள் தேவை கீழ்க்காணும் முகவரிக்கு 20 6-79முன் கடிதமூலம் விண்ணப்பிக்கவும் முகாமையாளர் ஜெயபாலன் இண்டஸ்ரீஸ், நீர்வேலி 2703


---

## ரூ. 29,695 கிடைத்தது

(புலோலி)

பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தால் பறிமுதல் செய்யப்பட்டனவும், வழக்குகள் முடிந்தும் கோரப்படாதனவுமாகிய பல சான்றுப் பொருட்கள் கடந்த சனிக்கிழமை பிரசித்த ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டன.

இதன்மூலம் 29,695 ரூபா கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. [அ]

---


## அறிவித்தல்

சண்டிலிப்பாய் சீரணி நாகபூஷணி அம்பாள் கோவில் தருமகர்த்தாக்களுள் ஒருவரும், தருமகர்த்தாசபைப் பொருளாளருமாக அருந்தொண்டாற்றிய திரு. க. தம்பையா அவர்கள் இறைவனடி சேர்ந்துவிட்டார்கள்

புதிய பொருளாளராக திரு. வ. செல்வத்துரை ஐயனார் வீதி. சண்டிலிப்பாய், நியமிக்கப்பட்டுள்ளார். இனிமேல் மேற்படி கோவிலுக்குக் காணிக்கை செலுத்த விரும்புவோர் புதிய பொருளாளருக்கு அனுப்பவும்.

முன்காணிக்கை செலுத்தியவர்கள், அதற்குப் பற்றுச்சீட்டுப் பெற்றிராவிட்டால் புதிய பொருளாளருடன் தொடர்புகொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

வே. கனகசபாபதி,
செயலாளர்,
தருமகர்த்தா சபை.

சீரணிநாகபூஷணி தேவஸ்தானம்,
சண்டிலிப்பாய், 10-6-79

2722


---

## கந்தர்மட இளைஞர் குழு யாழ். மேயருடன் சந்திப்பு

[யாழ்ப்பாணம்]

கந்தர்மடம் வட்டாரத்தைச் சேர்ந்த இளைஞர் குழுவொன்று கடந்தவெள்ளியன்று யாழ் மாநகர முதல்வர் திரு. இராசா விசுவநாதனைச் சந்தித்து தமது வட்டாரத்தின் அபிவிருத்திக்கென பதினொரு அம்ச திட்டம் ஒன்றினை சமர்ப்பித்தது

மகஜரில் கண்டுள்ள மின்சார விஸ்தரிப்பு சுகாதாரம், வடிகால் அமைத்தல் போன்ற முக்கிய அம்சங்களை முதலில் கவனிப்பதாக மேயர் உறுதி அளித்தார். திரு. நவஜோதி வாசன் தலைமையில் இந்தக் குழு யாழ். மேயரைச்சந்தித்தது.

இக்குழு சமர்ப்பித்த மகஜரில் வட்டாரத்திற்கு இரு மாணவர்களுக்கு பல்கலைக் கழக உபகாரநிதி வழங்குமாறும் மாணவர் படிப்பகம், பாலர் கல்வி நிலையம், சுயஉதவி வீடமைப்புத்திட்டம், பிரசவ விடுதி, இலவச மருத்துவமனை சிறுவர் பூங்கா ஆரம்பிக்குமாறும் சுகாதாரம், மின்சார விஸ்தரிப்பு. வடிகால் அமைப்பு வேலைகளை உடன் ஆரம்பிக்குமாறும், கோரப்பட்டிருந்தது. (கொ)

---


## கேள்விப் பத்திர அறிவித்தல்

பனைப்பகுதி நிறைவேற்றுப் பொறியியலாளரால் கீழ்வரும் வேலைக்கான கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன இதற்குரிய கேள்வி விண்ணப்பங்கள் 18-6-79 தொடக்கம் 22-6-79 மூன்று மணிவரை தகுதியுள்ள பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரரும், கிராம அபிவிருத்திச் சங்கமும், மற்றும் அனுமதிக்கப்பட்ட சங்கங்களும், கேள்வி விளம்பர வைப்புப் பணத்தைக் கட்டிப் பெற்றுக் கொள்ளலாம்.

கிரசர் கல் விநியோகித்தலும் ஏற்றிக் கொண்டு வந்து கிப் கட்டிக் கொடுத்தலும்.

| | | அளவு. | (கியூப்பில்) 2'' | 3/4'' | 4'' |
|---|---|---|---|---|---|
| 1. | உசன், மிருசுவில், கெற்பெலி வீதி | 1-ம் கட்டை | 44 00 | 6.50 | |
| 2. | உசன்-விடத்தல்பளை வீதி | 1-ம் கட்டை | 30 00 | 3 00 | |
| 3. | தொண்டமனாறு, வல்லை, துன்னாலை வீதி | 6-ம் கட்டை | 63 00 | 6 50 | |
| 4. (அ) | வல்லை, உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை ரோட் | 1-ம் கட்டை | 84.50 | 8.50 | |
| (ஆ) | வல்லை, உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை ரோட் | 2-ம் கட்டை | 84 50 | 8.50 | |
| (இ) | வல்லை, உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை ரோட் | 3-ம் கட்டை | 84.50 | 8 50 | |
| 5. (அ) | நெல்லியடி, கரவெட்டி ரோட் | 1ம் கட்டை | 71.50 | 8.75 | |
| (ஆ) | நெல்லியடி, கரவெட்டி ரோட் | 2-ம் கட்டை | 74 00 | 6 75 | |
| 6. | சாவகச்சேரி-பழையரோட் | | 31.50 | 3.50 | 26 50 |
| 7. | புத்தூர்-மீசாலை ரோட் | 2-ம் கட்டை | 74.00 | 7 50 | |
| 8. | புத்தூர்-மீசாலை ரோட் | 4-ம் கட்டை | 27 00 | 3 00 | |
| 9. (அ) | பொலிகண்டி-நவிண்டில் ரோட் | 1-ம் கட்டை | 61.00 | 6.00 | |
| (ஆ) | பொலிகண்டி-நவிண்டில் ரோட் | 2-ம் கட்டை | 46 50 | 4·75 | |
| 10. | உடுப்பிட்டி-மாலிசந்தை-இலவாய் ரோட் | 4-ம் கட்டை | 127 00 | 12 75 | |
| 11. | அச்சுவேலியில் இருந்து அந்தணன் திடல் கப்புத்து ரோட்டுக்கு கல்லேற்றிக்கொண்டு வந்து கட்டுதல் | | 64 50 | 6 50 | |

பூர்த்தியாக்கப்பட்ட கேள்விகள் நிறைவேற்றுப் பொறியியலாளர் பனைக்கு 28-6-79 10 மணிக்கு முன்னர் கிடைக்க வேண்டும்.

இவ்விடயம் சம்பந்தமாக மேலும் விபரம் தேவைப்படின் பனைப்பகுதி நிறைவேற்றுப் பொறியியலாளருடன் தொடர்பு கொள்ளவும்.

சி. வ. இராமச்சந்திரன்,
நிறைவேற்றும் பொறியியலாளர்,
பெருந்தெருக்கள் திணைக்களம்,
பளை.

2726

# இலங்கையில் பட்டுப்புழு வேளாண்மை

— சோ. புவனேந்திரன் —

(யாழ்.மாவட்ட புடவை நெசவாளர்[சமாஜம், கோண்டாவில்)

பட்டுப்புழு வளர்த்தல் என்பது முன்னைய அரசாங்கத்தின் ஐந்தாண்டுத் திட்டத்திலும், தற்போதைய அரசாங்கத்தின் தீவிர செயற்பாட்டுத் திட்டத்தில் முதலிடம் பெறுவதாலும், தற்சமயம் தேசிய இளைஞர் சேவை வடமாகாணத்தில் பட்டுப்புழு வேளாண்மையைகுடிசைக்கைத்தொழில் ரீதியில் ஆரம்பிக்க இருப்பதாலும், பட்டுப்புழுவளர்த்தல் பற்றி இக்கட்டுரையை எழுதுதல் சாலப்பொருத்தமானதாகும்.

பட்டுப்புழு வளர்த்தல்மூலம் எமது நாடு அந்நியச்செலாவணியைச் சேகரிக்கமுடியும் என்பதாலும், வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்கமுடியும் என்பதாலும் அரசாங்கம் சர்வதேச உதவித்திட்டத்தின் கீழ்பெருந்தொகையான பணத்தை மானியமாகபட்டுப்புழு வளர்ப்போருக்கு வழங்குகின்றது. பட்டுப்புழு வளர்க்கும் முறை குடிசைக் கைத்தொழில் ரீதியில் இன்று உலகம் பூராவும் பரவியுள்ளது பட்டுப்புழு வளர்க்கும் நாடுகளில் யப்பான் சீனா, கொரியா, இந்தியா என்பன முன்னணியில் நிற்கின்றன இந்தியாவின் பட்டு உற்பத்தியில் 85%மைசூர் மாநிலத்தில் உற்பத்திசெய்யப்படுகின்றது இலங்கையில் தோட்டக்கைத்தொழில் அமைச்சு பட்டுப்புழு உற்பத்தியை ஊக்குவிப்பதற்காக கண்டியில் உள்ள பல்லேகல என்னுமிடத்தில் ஒரு மத்திய ஆராய்ச்சி நிலையத்தை நிறுவியுள்ளது.

## மானியம் பெறலாம்

பட்டுப்புழு வளர்ப்போருக்கு தோட்டக் கைத்தொழில் அமைச்சு இரண்டாயிரம் ரூபாய்வரையில் மானியமாக வழங்குகின்றது. அத்துடன் உற்பத்தி செய்யப்படுகின்ற கூடுகளை றுத்தல் 16 ரூபாய்ப்படி உத்தரவாதவிலைத் திட்டத்தின்கீழ்அரசாங்கம் வாங்குகின்றது. ஒரு றுத்தல் புழுக் கூடுகளை உற்பத்திசெய்ய 6 ரூபாவுக்கு குறைவாகின்றது. எனவே ஒரு றுத்தலில் 10 ரூபாவுக்குமேல் இலாபமீட்ட முடியும். ஒரு ஏக்கருக்கு ஒரு வருட நிகர இலாபமாக 13,875 ரூபாவுக்கு கூடுதலாகவும், ஒரு ஏக்கருக்கு ஒருமாத நிகரஇலாபமாக 1150 ரூபாவுக்கு மேல் பெறமுடியுமென்றும் அறியப்படுகின்றது.

## முசுக்கொட்டைப் பயிர்ச் செய்கை:

பட்டுப்புழு உண்ணும் முசுக்கொட்டைச்செடி கடலமட்டத்தில் இருந்து 4000 அடி வரையும் நன்குவளரும். முசுக்கொட்டைச்செடியை துண்டங்கள் மூலம் பெருக்கமுடியும். இதுவரட்சியைத் தாங்கக்கூடிய ஒருதாவரமாகும் தற்சமயம் இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்ட கன்னவா-2 என்ற இனம் கூடுதலாக இலைகளைத்தரக்கூடியது. இதனைத் தென்னை மரங்களுக்குள்ளும் ஊடுபயிராக வளர்க்கமுடியும். கன்னவா-2 இனத்தை நடுவதற்கு சோலாரி நடுகை முறை உபயோகிக்கப்படுகின்றது. இதன் நடுகைத்தூரம் $1\frac{1}{2}$'X9 அங்குலமாகும். இதன்படி ஒரு ஏக்கருக்கு 39,000 துண்டங்கள் தேவைப்படுகின்றன.

## உரப்பசளைகள்:

முசுக்கொட்டைச்செடி நிலப்பசளையை அதிகம் உறிஞ்சி வளர்வதால் இயற்கைப் பசளையும், செயற்கைப்பசளையையும் இடல் அவசியமாகும். மழையை எதிர்பார்த்து முசுக்கொட்டைச்செடிவளர்ப்போர் 160 இருநைதரசன், 50இரு பொசுபரசு, 50 இரு பொட்டாஸ் என்பன இடப்படல் வேண்டும். சோலாரி முறையின்கீழ் கிரமமாக நீர்ப்பாய்ச்சி 200 இரு. நைதரசன் 100 இரு பொசுபரசு 100இரு. பொட்டாஸ் என்பன இட்டால் ஒரு ஏக்கருக்கு 30,000 தொடக்கம் 40,000 இருத்தல் இலைகளைப் பெறமுடியும். ஒருஇருத்தல் இலையைப்பெறுவதற்கு பத்துச்சதம்வரையில் செலவுஏற்படுகின்றது. முசுக்கொட்டைச் செடிகள் நட்டு 4 மாதத்தின்பின்னர் கொய்தல்மூலம் அறுவடையை ஆரம்பிக்கலாம். ஒவ்வொரு தடவையும் முசுக்கொட்டைச் செடியைக் கத்தரிக்கும் பொழுது பசளையிடல் அவசியமாகும். இவ்வாறு பசளையிடுவதனால் கூடியதரமான இலைகளைப்பெறமுடியும்.

பட்டுப்புழுவளர்ப்பு:- பட்டுப்புழுவினது வாழ்க்கை வட்டத்தில் முட்டை, குட்டி, கூட்டுப்புழு, தாய்ப்பூச்சி என நான்கு பிரிவுகள் உண்டு. பட்டுப்புழுவின் வாழ்க்கைவட்டம் ஏறக்குறைய ஏநேரமாக ஆறுவாரங்களைக் கொண்டது. இதில் முட்டைப்பருவம் எட்டுநாட்களைக் கொண்டது. ஒருவருடத்திற்கு எட்டுத்தடவை பட்டுப்புழுவளர்ப்பினை மேற்கொள்ள இயலும். பட்டுப்புழுவின் முட்டைகள் பொரிக்க முன்பு ஐதான ஐதரோக்குளோரிக் அமிலத்தில் ஐந்து நிமிடம் வைத்திருத்தல் வேண்டும், வெள்ளைநிறமான இந்த முட்டைகள் பொரிக்க முன்பு கறுப்பு நிறமாகமாறுகின்றது. இப்பழுவிற்கு முதிர்ந்த இலைகள் தூசிபடிந்த இலைகள், மிக ஈரமான அல்லது காய்ந்த இலைகள் தவிர்க்கப்படல்வேண்டும். பட்டுப்புழுமுட்டை பொரித்து நான்காம்நாள் இறுதியில் கவசம் கழற்றும். இவ்வாறு ஐந்து தடவைகள் கவசம் கழற்றல் நடைபெறும் கவசம் கழற்றலின்போது புழுவானது உணவை உட்கொள்ளமாட்டாது. முதல் மூன்று தடவையும் கவசம் கழற்றல் வரை தினசரி மூன்று அல்லதுநான்கு தடவையும் கடைசி இரு தடவையும் நான்கு அல்லது ஐந்து தடவையும். உணவு அளித்தல் வேண்டும். முதலாம் பருவத்தில் 0 5-2 செ. மீ. வரையும். இரண்டாம் பருவத்தில் 2 0 -4 செ. மீ. வரையும், மூன்றும் பருவத்தில் 4 0-6 செமீ வரையில் முசுக்கொட்டை இலையை அரிந்து போடல் வேண்டும். நான்காம், ஐந்தாம் பருவங்களில் சிறிய வெட்டுக்களாக இலைகளைப்போடலாம்.

ஒவ்வொரு தடவையும் கவசம் கழற்று நிலைக்கு முன்பாக புழுவளரும் தட்டுக்களைச் சுத்தம் செய்தல் வேண்டும். பட்டுப்புழுவிற்கு பெப்ரின், பிளாச்சரி, கிருசரி, மஸ்காடைன் போன்ற நோய்கள் தாக்கப் பார்க்கும். எனவே புழுவளரும் இடம் மிகுந்த சுத்தமாக இருத்தல் வேண்டும்.

கூட்டுப்புழுப்பருவம் ஐந்தாம் நிலையில்தான் ஏற்படுகின்றது. இதற்கு சிறிது முன்பாக புழுவானது நிலையற்றதாக அங்குமிங்கும் அலையும் தட்டுக்களின் ஓரத்திற்கு வந்து தங்கப்பார்க்கும். உணவைச் சரிவர உண்ணமாட்டாது. மெல்லிய மஞ்சள் நிறத்தை அடையும். இந்தக் குறிகள் காணப்பட்டால் மூங்கில் தடிகளால் அதன் வட்ட மடிப்புக்களைக் கொண்ட சுற்றுக்களை உடைய சந்திரிகா என அழைக்கப்படும் நூற்கும் தட்டினுள் விடல் வேண்டும். மூன்றுநாட்களில் இவை பூரணமாக ஒரு கூட்டைக் கட்டிமுடிக்கும். ஒரு தனிக்கூட்டை எடுத்து ஆராய்ந்தால் ஒரேஒரு நூலினால் ஆக்கப்பட்டிருக்கும் இதன் நீளம் 1400 யார் வரையில் இருக்கும் இன்று ஒரு றுத்தல் பட்டு நூல் 400 ரூபாய் வரையில் விலைப்படுகின்றன, எனவே பட்டுப்புழு உற்பத்தியில் நாம் ஈடுபட்டால் நன்கு பணம் சம்பாதிக்க முடியும்.

## அரசாங்கம் வழங்கிய மானியம்

பின்வருமாறு [ஒரு ஏக்கர்]

| | | ரூபா-சதம் |
|---|---|---|
| 1. | முசுக்கொட்டைச் செடி- | 25-00 |
| 2. | பசளை | 485-00 |
| 3. | புழுவளரும் தட்டுக்கள்- | 10-00 |
| 4. | புழுமுட்டைகள் | 80-00 |
| 5. | நிலம் துப்புரவாக்கி முசுக்கொட்டைசெடி வளர்க்க | 400-00 |
| 6. | புழுவளர்க்கும் அறை அமைக்க | 500-00 |
| 7 | புழுவளர்க்க மேலதிக உதவி | 500-00 |
| | | 2000-00 |

பட்டுப்புழு வளர்த்தல்பற்றி மேலதிகமாகவிபரங்கள் தேவைப்படுமிடத்து மேற்குறிப்பிட்டமுகவரியில் தொடர்பு கொள்ளலாம்.

---

## மக்கள் கருத்து

### கொடிகாமம் ஆஸ்பத்திரிக்கு மின்சாரம் அவசியம்

'ஈழநாடு' மக்கள் கருத்து பகுதியில் 6-6-79 வெளியிடப்பட்டிருந்த கொடிகாமம் வைத்தியசாலை பற்றிய கருத்து மிகவும் அவசியமானதாகும். சுகாதாரப்பகுதியினர் உடனடியாக தங்கள் கவனத்தின் கீழ் கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டியதுமான ஒரு பொதுநலவிடயமாகும். அதில் மேலும் சில குறைபாடுகளைக் குறிப்பிடத் தவறிவிட்டனர். கொடிகாமம் அரசினர் வைத்தியசாலையில் நீர் பெறக்கூடிய வசதியிருந்தும் இல்லாத நிலை தவிர்க்கப்பட வேண்டும். ஆண்கள் தங்கிச் சிகிச்சைபெற கட்டாயமாக வார்ட் மண்டபம் அவசியம் நிறைவேற்றப்பட வேண்டும். மற்றும் டாக்டர் தங்குவதற்கு விடுதியில்லாததும் ஒரு குறையாகும். இவ்வைத்தியசாலைக்கு மின்சாரவசதி செய்துகொடுக்கப்படாததால் பிரசவங்கள் நடைபெறும்போது அரிக்கன் லாம்புகளுடன்தான் நடைபெறுகின்றன. இப்போது காற்று அதிகமாகவீசும்காலம். இதனால் காற்றுவீசி சில தடவைகள் லாம்பு அணைந்துவிட்டால் பிரசவவேளையில் சேவையிலீடுபட்டிருக்கும் மருத்துவமாது படும் கஷ்டமோ சொல்லுந்தரமன்று, வைத்தியசாலைக்கு முன்பாக கண்டிவீதியில் மின்சாரத்தூண்கள் போடப்பட்டிருந்தும் வைத்தியசாலைக்கு மின்வசதி கொடுபடாதது பெருங்குறையாகும்.

மு. செல்வநேசன்.
மிருசுவில்.

---

"புதிய அரசு பதவிக்கு வந்தபின்

# சிறுபான்மைத் தமிழர்கள் நசுக்கப்படுகின்றனர்"

## வடக்கின் பல பகுதிகளில் திட்டமிட்டு அந்தி நடக்கிறது

[யாழ்ப்பாணம்]

"இந்த அரசு பதவிக்கு வந்த பின்னர், வடபகுதியில் பல இடங்களில் சிறுபான்மைத் தமிழர்கள் நசுக்கப்பட்டு வருகின்றார்கள். காணிகளிலிருந்து பலாத்காரமாக வெளியேற்றப்படுகின்றனர். அரசியல் ரீதியாகச் சிறுபான்மைத் தமிழருக்கு அநீதிகள் செய்யப்படுகின்றன."

யாழ்ப்பாணம் சன்மார்க்க ஐக்கிய வாலிபர் சங்க மண்டபத்தில் நடந்த கண்டனக் கூட்டத்தில் பேசிய சிறுபான்மைத் தமிழர் மகாசபைத் தலைவர் திரு. வடிவேலு மேற்கண்டவாறு கூறினார்.

ஒடுக்கப்பட்டோர் ஐக்கிய முன்னணித் தலைவர் திரு. எஸ். ரி. என். நாகரத்தினம் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் திரு. வடிவேலு மேலும் கூறியதாவது: "வாதரவத்தையிலுள்ள பெரும்பான்மைச் சமூகத்தினருக்குக் கோப்பாயிலிருந்து குழாய்நீர் வசதி செய்யப்பட்டுவருகிறது ஆனால் இடையிலுள்ள சிறுபான்மைத் தமிழர்கள் உடப்பு நீரையே குடித்துக்கொண்டிருக்கிறார்கள் அவர்களுக்குக் குடிநீர் வசதி செய்துகொடுக்கப்படவில்லை. இதனைக் கேட்பது தவறு?

காரைநகரில்,பொதுக்கிணற்றில் சிறுபான்மைத் தமிழர் தண்ணீர் அள்ளுவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது

பவுஸர் ஏற்பாடு மூலம் தண்ணீர் அனுப்புவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பவுஸர் மூலம் தண்ணீர் அனுப்புவதால் தீண்டாமைப் பிரச்சனை தீர்ந்துவிடுமா? பொதுக்கிணற்றில் நமது மக்கள் தண்ணீர் அள்ள வழி செய்யப்படவில்லை.

புன்னாலைக்கட்டுவனில் சிறுபான்மைத்தமிழரின் குடிசைகள் எரிக்கப்பட்டன. 12 பேர் அநாதைகளாகினர்.

கைதடியில் சிறுபான்மைத் தமிழர், தேரை இழுக்க முன்வந்ததால் சுவாமி சுற்றுலா இடையில் நிறுத்தப்பட்டது

அரசியல் ரீதியில் திட்டமிட்டுச் செய்யப்படும் அநீதி இது.

திரு. எஸ். ரி. என். நாகரத்தினம் கூறியதாவது;

"யூ என் பி. ஆட்சிக்கு வந்த பின்னர், பல கோணங்களில் சிறுபான்மைத் தமிழர் நசுக்கப்பட்டுவருகின்றனர்,

புன்னாலைக்கட்டுவன், தனங்கிழப்பு, காரைநகர், கைதடி மற்றும் பல பகுதிகளில் திட்டமிட்டுச் சிறுபான்மைத் தமிழர் துன்புறுத்தப்படுகின்றனர்.

தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தைச் சேர்ந்த திரு. டானியல் கூறியதாவது! "சாவகச்சேரித் தொகுதி அறப் போராட்டக் குழுவின் கறுப்புப் பட்டிப் போராட்டம், சிறுபான்மைத் தமிழரின் உரிமைப் போராட்டத்தைத் திசை திருப்பவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அகில இலங்கைத் தமிழ் பௌத்த காங்கிரஸ் பிரதிநிதி திரு. வைரமுத்து பேசுகையில், கறுப்புப்பட்டிப்போராட்டம் சிறுபான்மைத் தமிழரின் உரிமைப் போராட்டத்தைத் திசைதிருப்பவே ஆரம்பிக்கப் பட்டுள்ளது" என்றார்.

சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணிப் பிரதிநிதி திரு. செல்லத்தம்பு பேசுகையில், கறுப்புப்பட்டிப் போராட்டம், வெறும் கண்துடைப்பு என்றும், இதனால் பிரச்னை தீர்ந்துவிடாதென்றும் கூறினார்.

இக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் வருமாறு:

"கைதடியில் இரு சமூக மக்கள் மத்தியில் ஏற்பட்ட தகராறு தொடர்பாக ஏற்பட்ட வன்முறைச் சம்பவங்களைக் கண்டித்து இம்மாதம் 15ம் திகதி" இந்து இளைஞர் முன்னணியும்' அறநெறிகாவல் போராட்டக் குழுவும் இணைந்து பரந்த அளவில் கறுப்புப்பட்டி இயக்கம் நடத்தவுள்ளமையை ஐக்கிய முன்னணி கண்டிக்கிறது அடிப்படையில் தாழ்த்தப்பட்ட மக்கள் தேர் இழுப்பதனை வன்முறையாக எதிர்த்து நின்று இச்சம்பவங்களுக்கெல்லாம் மூலகாரணமாக அமைந்த கைதடிப் பிள்ளையார் கோவில் பரிபாலகர்களுக்கெதிராக அறப்போராட்டம் நடாத்த முன்வராத இக் குழுவினர் வன்முறைச் சம்பவங்களுக்கு எதிரான இயக்கம் என்னும் பெயரில்

(5-ம் பக்கம் பார்க்க)

---

புங்குடுதீவு

### கண்ணகை அம்பாளுக்கு மகாகும்பாபிஷேகம்

[சரவணை]

புங்குடுதீவு கிழக்கு ஸ்ரீ கண்ணகை அம்பாள் ஆலய புனராவர்த்தன பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகம் இம்மாதம் 27ந் திகதி காலை நடைபெற ஏற்பாடாகியுள்ளது. இதற்கான ஆரம்பவேலைகள் துரிதமாக நடைபெற்றுவருகின்றன.

முப்பத்துமூன்று குண்ட, நவகுண்ட, பஞ்சகுண்ட, ஏககுண்ட உத்தமோத்தம மகா யாகம் நடைபெற்று மகாகும்பாபிஷேகம் நடைபெறும்.

தென் இந்தியா திருக்கோலக்கா சீர்காழி சிவஸ்ரீ ந. இராமநாத சிவாச்சாரியார் இக்கும்பாபிஷேகத்தில் கலந்து கொள்கிறார்.

சிவஞானபானு சிவஸ்ரீ சு. பரமேசுவரக் குருக்கள், பிரதிஷ்டா கலாநிதி சிவஸ்ரீ நா. சோமாஸ்கந்தக்குருக்கள் சிவாகம கிரியாரத்தினம் சிவஸ்ரீ கு இராமநாதக்குருக்கள், ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ ப. கணேசராசாகுருக்கள் உட்பட 55குருக்கள்மார் கும்பாபிஷேக வைபவத்தில் கலந்து கொள்கிறார்கள்.

இம்மாதம் 20ந் திகதி மகா கும்பாபிஷேகக் கிரியைகள் ஆரம்பமாகின்றன.

திருப்பனந்தாள் ஆதீனம் திரு முத்துக்கந்தசுவாமி தேசிகரின் பன்னிரு திருமுறைப் பாராயணமும் கும்பாபிஷேக வைபவத்தின்போது இடம் பெறும். (அ)

# பாடசாலை நூலகங்கள் மாணவரைநல்வழிப்படுத்தும்

(தெல்லிப்பழை)

"பின்தங்கிய கிராமப் பாடசாலைகளில் நூலகங்கள் இருப்பது மிகவும் அவசியம். இது மாணவர்களின் தீய சமூக பொருளாதார முறைமைகளை மாற்றி நல்வழிப்படுத்தும்"

இவ்வாறு தெல்லிப்பழை கட்டுவன்புலம் அரசினர் வித்தியாலயத்தில் அனைத்துலகச் சிறுவர் வாரத்தையொட்டி அமைக்கப்பட்ட சிறுவர் நூலகத்தை மில்க்வைற் தொழிலதிபர் திரு. க. கனகராசா திறந்துவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

வித்தியாலய அதிபர் திரு. சி. சிவநாதபிள்ளை தலைமையில் நடைபெற்ற இந் நூலகத் திறப்பு விழாவில், காங்கேசன்துறை வட்டாரக் கல்வி அதிகாரி திரு. பொ. சிவஞானசுந்தரம் குத்துவிளக்கேற்றி வைத்து அனைத்துலகச் சிறுவர் தினத்தைக் கொண்டாடும் நோக்கங்கள் பற்றிக் குறிப்பிட்டார்.

வித்தியாலய அதிபர் திரு சிவநாதபிள்ளை பேசுகையில் 'குழந்தையை மனிதனாக்கும் முயற்சியில் பாடசாலை நூலகம் முக்கிய பங்குவகிக்கிறது. இந்நூலகத்தை திறந்துவைப்பதற்கு உதவியாக, பயன்படத்தக்க அரிய நூல்களைத் தந்துதவிய சகல பெரியார்களுக்கும், ஸ்தாபனங்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்' என்றார்.

மில்க்வைற் செய்திப் பத்திரிகை ஆசிரியர் திரு. க. சி. குலரத்தினம் உட்பட பலர் பேசினர்.

வித்தியாலய மாணவர்களின் கலை நிகழ்ச்சியும், நாட்டுக்கூத்தும் இடம்பெற்றன. (ஈ)

## ஜெயப்பிரகாஷ் மீண்டும் சுகயீனம்

[பம்பாய்]

சர்வோதய இயக்கத் தலைவர் திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் மீண்டும் சுகயீனம் காரணமாக இன்று ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## இன்றைய பலன்

வைகாசிமாதம் 29-ம் திகதி

[செவ்வாய்க்கிழமை]

(12-6-1979)

மேடம் : எதிர்பார்த்த பொருள்வரவுக்கு இடமுண்டு, பூமியால் லாபம் கிடைக்கும், புத்திரர் வழியாலும் நன்மை இண்டு

இடபம் : உறவாடிக் கெடுப்பதற்குப் பகையாளிகள் வருவர், உற்சாகம் குன்றும், பிரயாணத்தின்போது பொருள் தவறக்கூடும், சிலருக்கு உஷ்ண ரோகம் சம்பந்தமான நோய் ஏற்படும்.

மிதுனம் : வெற்றி உமது அருகில் விரைந்து வரும், எதிர்த்தவர்களே ஆதரவு தருவதற்கு முன்வருவார்கள், களஸ்திர வழியாலும் நன்மைகள் சேரும், காதலர்களுக்கு இனிப்பான தினம்,

கடகம் : எக்கருமத்தையும் எண்ணித் துணிக, அவசரப் போக்கினுல் அருமையான சந்தர்ப்பத்தை கோட்டைவிடக்கூடும், வணிகர்களாயின் அதிக முதலீட்டைத் தவிர்த்துக் கொள்ளவும், நிதானம் வேண்டும்,

சிங்கம் : உறவுமுறைகள் பலப்படும், உற்சாகம் பெருகும், புதிய நண்பர்கள் புடைசூழ்வர், வாழ்த்தும் உண்டு.

கன்னி : வித்தையில் வெற்றிகாணும், வேண்டியது கிடைக்கும், பொதுமக்கள் தொடர்புடன் புகழ் வந்து சேரும்.

துலாம் : மெத்தவும் பொருள் சேரும், மேலிடத்து ஆதரவும் தப்பாமல் கிட்டு, தித்திக்கும் செய்தியுடன் தேனுன வாழ்வும் உண்டு.

விருச்சிகம்: எண்ணங்கள் ஆயிரம சிந்தையிலே வந்து உற்றும், ஏமாற்றம் தாக்கும், விந்தையான போக்கு வேடிக்கை காட்டும்,

தனுசு : அவசர புத்தியினல் விபரீதங்கள் விளையலாம், கோபத்தை அடக்கின் நிலைமை சிர்பெறும்.

மகரம் : பேச்சு வன்மையினுல் பெரும் புகழ் சேரும், பெரியோர்களும் ஆசி தருவர். அரசியல்வாதிகளின் அதிக செல்வாக்கைப் பெறுவர்.

கும்பம் : நற் பருமம் மூலம் தடுமாற்றம் ஏற்படும், கலிதுடைப்பு வேலை நடக்கும், கவனம் செலுத்தவும், பெரியோரைப் பகைத்துக் கொள்ளாமல் பொறுமையைப் பேணி நடக்கவும்.

மீனம் : அறிஞர் சந்திப்பு இன்று நிகழும், அறவழியில் ஆர்வம் பிறக்கும், ஆக்கப்பணியில் கவனம்செலுத்தவும்.

சோதிடக்கலாநிதி

திருமலை க. வேலுப்பிள்ளை

## நெல்லியடியில் நவீனசந்தை

(நெல்லியடி)

நெல்லியடி மத்திய சந்தை சுமார் 7லட்சம் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளது. தற்போதய சந்தை அமைந்துள்ள இடத்திலேயே புதிய சந்தை அமைக்கப்படவுள்ளது. அதுவரை பாடசாலை வீதியில் அமைக்கப்படவுள்ள தற்காலிக கொட்டகைகளில் சந்தை இயங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (வ)

......

## சகஸ்ர சங்காபிஷேகம்

[யாழ்ப்பாணம்]

சுன்னுகம் வருஷப்புலம் மஹாமுத்துமாரி அம்பாள் ஆலயத்தில் மணவாளக்கோல விழாவை முன்னிட்டு சகஸ்ர சங்காபிஷேகம் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெற இருக்கிறது கிரியாமுத்தாமணி அல்வாயூர் மாலிசந்திலைச் சேர்ந்த சிவஸ்ரீ தேவராசக்குருக்கள் பிரதம சிவாச்சாரியராகக் கடமை செய்வார் நல்லூர் நியாய வியாகரண சிரோமணி சி. சுப்பிரமணிய சாஸ்திரிகள், தெல்லியூர் உமாமகேஸ்வரன் ஆகியோரின் சொற்பொழிவுகள் இடம்பெறவுள்ளன அன்னதானம் விசேஷ இன்னிசையுடன் [சுவாமி] அம்பாள் வீதி உலாவருகை என்பனவும் நடைபெறவுள்ளன

......

## அத்துளுகுளத்தில் விநாயகர்சிலை

(நெல்லியடி)

கரவெட்டியிலுள்ள அத்துளுகுளத்தில் கருங்கல்லில் செதுக்கப்பட்ட பிள்ளையார் சிலையொன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.

சனிக்கிழமை காலையில் அத்துளுகுளத்தில் சேறு அகற்றிய விவசாயிகளால் இச்சிலை கண்டெடுக்கப்பட்டது.

விவசாயிகள் தமது வெங்காயத்திற்கு நீர் போதாமையினுல், சேறு அகற்றி நீர்பெற முயற்சித்தபோது இச்சிலை கண்டுபிடிக்கப்பட்டது.

ஒன்றரை அடி உயரமும், ஒன்றரை அடிக்குக் குறைந்த அகலமும் கொண்ட இச்சிலையின் தும்பிக்கை சேதமுற்றுள்ளது முடியுடன் காணப்படும் இச்சிலையைப் பெருந்திரளான மக்கள் பார்வையிட்டு வணங்கிச் செல்கின்றனர்கள்.

## தேசாய் ரஷ்யா சென்றார்

(தாஷ்கன்ட்)

இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜிதேசாய் இன்று சோவியத் யூனியன் போய்ச் சேர்ந்தார். பிரதமராக 77-ம் ஆண்டில் பதவியேற்றபின் ரஷ்யாவுக்கு அவர் இடபோது இரண்டாவது தடவையாக விஜயம் செய்திருக்கிறார் திரு தேசாய் போலந்து, செக்கோஸ்லவாக்கியா, யூகோஸ்லாவியா ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்வார்.

## பட்டமளித்துக் கௌரவம்

[பண்டத்தரிப்பு]

அளவெட்டி கும்பளாவளைப் பிள்ளையார் ஆலயத்தில்கடந்த வியாழக்கிழமை இரவு இன்னிசைக்கச்சேரி நிகழ்த்திய பிரபல தென்னிந்தியப்பாடகரும், திரைப்பட பின்னணிப்பாடகருமான தாராபுரம் சுந்தரராஜனுக்கு அளவெட்டி முத்தமிழ் மன்றத்தினர் 'இசைமாமணி' என்னும் பட்டத்தை மேடையில்வைத்து வழங்கிக் கௌரவித்தனர். (அ)

## போட்டியின்றித் தெரிவு

[வரெழு]

வலிகாமம் கிழக்கு தென்பகுதிப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் ஒன்பதாம் இலக்க வரெழுக்கிளையின் நிர்வாக சபைத் தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் மேற்படி கிளை அலுவலகத்தில் கடந்த வாரம் ஏற்றுக் கொள்ளப்பட்டன இதில், பின்வரும் ஒன்பது பேரும் போட்டியின்றித் தெரிவுசெய்யப்பட்டனர் திருவாளர்கள் மு வீரசிங்கம், அ கனகசூரியர், கு பரமராசா, ந கணேஸ், ப மகேந்திரம், இ சண்முகதாஸ், வ தவராசா, கி தங்கராசா, க மகேந்திரம். (அ)

## மின் துண்டிப்பு முன்னறிவித்தல்

[உடுப்பிட்டி]

நெல்லியடிப் பட்டினசபைப் பகுதியில் மின்சாரப்பாவனையாளர்கள் பெரும்பாலானோர் உரியகாலத்தில் மின்சாரக் கட்டணத்தைச் செலுத்தாமல் தாமதம் செய்துவருகின்றனராம்.

இதனை தொடர்ந்து நெல்லியடிபட்டினசபை மின் கட்டணத்தைச் செலுத்தத் தவறியவர்களின் மின்விநியோகத்தைத் துண்டிப்பதற்கு முடிவு செய்துள்ளது

இதற்கு முன்னோடியாக மின் துண்டிப்புக்கான முன் அறிவித்தல் கடிதங்களை அனுப்பிவைத்துள்ளது.

## நடனப்போட்டியில் முதற்பரிசு

[ஊர்காவற்றுறை]

சமீபத்தில் வேலணை மத்திய மகாவித்தியாலயத்தில் நடந்தேறிய அகில இலங்கை பாடசாலைகளின் நடனப்போட்டியில் ஊர்காவற்றுறை சென்மேரிஸ் மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த செல்வி திரு நாவுக்கரசு சங்கரி மயில் நடனமாடி முதற் பரிசைப் பெற்றார்

இவர் ஊர்காவற்றுறை கரம்பனைச் சேர்ந்த செல்வி மறியின் பின்ரா அலோஷியஸின் மாணவி என்பது குறிப்பிடத்தக்கது [ ]

## மதுவெறியில் வாகனத்தைத் தாக்கினாராம்

(மாவிட்டபுரம்)

வீதியில் நின்ற வாகனமொன்றை மதுவெறியில் கையினுல் தாக்கி சேதம் விளைவித்ததாகக்கூறப்பட்டு ஒருவர்பொலிசாரால் தேடப்பட்டுவருகிறார்

காங்கேசன்துறை கல்லூரி வீதியில் நின்ற இலங்கை போஷாக்குணவு உற்பத்தித் தொழிற்சாலை வானின் கண்ணுடிகளை அவ்வழியால் மதுவெறியில் வந்த சி ஸ்ரீகாந்தன் என்பவர் கையினுல் அடித்து நொறுக்கிச் சேதம் விளைவித்தாராம்.

இது குறித்து காங்கேசன்துறைப்பொலிசில் செய்யப்பட்ட புகாரினையடுத்து பொலிசார் இந்நபரைத்தேடி வலைவிரித்துள்ளனர். (இ)

குப்பிளான்

## பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

[மல்லாகம்]

குப்பிழான் விக்னேஸ்வரா பாடசாலை அபிவிருத்திச் சங்க ஆரம்பக் கூட்டம் அதிபர் திரு க நடராசா தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர் நடப்புவருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு க நடராசா, துணைத்தலைவர்கள் திருவாளர்கள் த தருமலிங்கம், நா செல்வநாயகம், செயலாளர் திரு க பொ நடனசிகாமணி துணைச்செயலாளர் திரு மா சின்னத்துரை, பொருளாளர் திரு சி சிவஞானம் ஐவர் கொண்ட செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டது.




சேர்கோப்பூர்

36% (3, 4, டீ. பீ. ஏ. கொண்டது)

சேர்கோப்பூர் 36%, (பட்ட மாத்திரத்திலேயே) சேருன அல்லது உலர்ந்த நெல் வயலில் உள்ள நெற்சப்பி, கோழிச்சூடன், குதிரைவாற்புல், கிடைச்சி, கோரை, மொண்டி ஆகிய சகல களைகளையும் கட்டுப்படுத்தும் வன்மையான களைநாசினி, உச்சப் பயன் பெற, விதைத்து 7-21 நாட்களுள் சேர்கோப்பூர் தெளிக்க வேண்டும். களைகள் 2-3 இலை விட்டிருக்கும் காலத்தில் பாவிப்பதே மிகச் சிறந்தது, சேர்கோப்பூர் 36% பாவித்து நெற்களைகளைக் கட்டுப்படுத்தி விளைச்சலைக்கூட்டி இலாபத்தைப் பெருக்குங்கள்.

தரமான BAYER பாயர் பீடைநாசினிகளைப் பாவியுங்கள்.

இலங்கையில் பாயர் பீடைநாசினிகளைத் தயாரிப்போர்:

ஹேக்கெம் லிமிட்டெட்

400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10. தொலைபேசி: 93563, 96331-6.

melADS

நாகம்ஸ் (கன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
ஜெமினி - சிவாஜி
உனக்காக நான்

Rio Phone : 7007
(Jaffna) Daily 10-30, 4-45, 7-00 & 9-30 p.m.
THE WEEKEND
Adults Only)

## சிறுபான்மை...

(3 ம் பக்கத் தொடர்ச்சி)

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிராக நடாத்தவிருக்கும் ஒரு தவறான இயக்கமே இக் கறுப்புப்பட்டி இயக்கமெனக் கருதுகிறோம். ஆகவே இத்தகைய இயக்கங்கள் சாதிமுறையைக் காப்பாற்றும் நோக்குடன் கட்டி வளர்க்கப் படுமேயானால், தாழ்த்தப் பட்ட மக்களும் தமது உரிமைகளை நிலைநாட்ட அதே போன்ற இயக்கங்களை உருவாக்க நேரிடும்''. [க-வ]

ராஜா தினசரி 4 காட்சிகள்
யாழ். நகர் எம்.ஜி.ஆர் - ஜெயலலிதா
சௌகார் ஜானகி நடித்த
ஒளி விளக்கு
புதிய பிரதி ஈஸ்ட்மன்கலர்

தினசரி 4 காட்சிகள்
மனோகரா எம். ஜி. ஆர். - ராஜகுமாரி
(யாழ்நகர்) நடித்த
குலேபகாவலி
(புத்தம்புதிய பிரதி)

24-வது வாரம்
வின்சர் தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்) 10-30, 2-00, 6-00, & 9-30
பைலட் பிரேம்நாத்
(ஈஸ்ட்மன் கலர்)

REGAL Daily at 2-00. 4-30, 7-00 & 9-30 p.m. only
(Jaffna) Saturday & Sunday at 10-30 a.m.
URSULA ANDRESS
in
Mountain In The Jungle
Color — Scope — Adults
வயது வந்தவர்களுக்கு மட்டும்

2-வது ஜனத்திரள் வாரம்
நாளை நாளை என்று நாளைப் பின்போடாது
இன்றே கண்டு களிக்கத் தவறாதீர்கள்
ஸ்ரீதர் தினசரி 10-30, 2-30, 6-15, 9-45
(யாழ்ப்பாணம்) முத்துராமன் - தேவிகா
கல்யாணகுமார் நடித்த
நெஞ்சில் ஓர் ஆலயம்
குறிப்பு: யாழ்நகரில் இதுவே கடைசித்தடவையாக காண்பிக்கப்படுகிறது.
[புதிய பிரதி]

ராணி தினசரி 4 காட்சிகள்
யாழ் நகர்) எஸ்.எஸ்.ஆர்.-ராஜசுலோஜனா-பாலையா
தேடிவந்த செல்வம்
(புதிய பிரதி)

தினசரி 4 காட்சிகள்
சாந்தி (யாழ்நகர்) கடைசித் தினம் 14-6-79
காமினி பொன்சேகா தமிழன் நடராசாவாக
யாழ்ப்பாணத் தமிழில் பேசி நடிக்கும் சித்திரம்
காதுக்கினிய தமிழ்ப் பாடல்கள் நிறைந்த...
''சறுங்கலே'' —சிங்களம்
தமிழ்—
15 முதல் உங்களை வயிறு குலுங்கச் சிரிக்கவைக்கும்
''THE RETURN OF THE PINK PANTHER''
Scope — Colour — Full of Comedy

இன்று மட்டும்
வெலிங்டன் தினசரி; 2-30, 6-30 & 9-45
(யாழ்ப்பாணம்) சனி, ஞாயிறு 10-30, 2-30
6-30 & 9-45
வேட்டைக்காரன் (புதிய பிரதி)
நாளை முதல்: வைராக்கியம்

லிடோ போன் : 7898 தினசரி 4 காட்சிகள்
(யாழ்.நகர்) A. V. M. ராஜன்
நிறைகுடம்

## செங்கலடி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

னுச்சாமி சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

1, 2, 3ம் எதிரிகளை 19 3-78ம் ஆண்டு மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் பரிசோதித்தேன்-

### 1ம் எதிரிக்கு எட்டுக் காயம் 1 சூட்டுக்காயம்

முதலாம் எதிரிக்கு உடலில் 8 காயங்களும் 2ம் எதிரிக்கு 3 காயங்களும் 3ம் எதிரிக்கு 6 காயங்களும் இருந்தன.

முதலாம் எதிரியின் வலது கையின் மேல்புறத்தில் துப்பாக்கிச் சூட்டுக்காயம் இருந்தது. அக்காயத்தினுள் இருந்த துப்பாக்கிச்சன்னம் சத்திர சிகிச்சைமூலம் அகற்றப்பட்டது. அவரின் வயிறு முழுவதும் பல காயங்கள் இருந்தன.

சிரேஷ்ட சட்டத்தரணி திரு சிவசிதம்பரம் குறுக்கு விசாரணை செய்தபோது டாக்டர் கூறியதாவது:

### இரத்தவாந்தி எடுத்தார்

முதலாம் எதிரி இரத்த வாந்தி எடுத்ததாக சோதனையின்போது தெரியவந்தது.

வயிற்றில் ஏற்பட்ட காயங்கள் காரணமாக அவர் இரத்த வாந்தி எடுத்திருக்கலாம்.

### சப்பாத்துக்காலினால் வயிற்றில் தாக்கியதனால்...

வயிற்றில் சப்பாத்துக்காலினால் தாக்கப்பட்டமையினால் காயம் ஏற்பட்டு அவர் இரத்த வாந்தி எடுத்திருக்கலாம்.

### படுக்கவைத்து காலில் அடித்ததனால்...

3ம் எதிரிக்கு பாதத்தில் காயம் இருந்தது. அக்காயங்கள் அவரை நிலத்தில் படுக்க வைத்து அடித்ததனால் ஏற்பட்டிருக்கலாம்.

மட்டக்களப்பு ஆஸ்பத்திரி சத்திரசிகிச்சை நிபுணர் எஸ் சுப்பிரமணியம் சத்திர சிகிச்சையின் மூலம் தாம் முதலாம் எதிரியின் உடலில் இருந்து எடுத்த துப்பாக்கிச் சன்னத்தை அடையாளம் காட்டினார்.

விசாரணை இன்று தொடரும். [ம-இ]

## காங்கேசனில் மாணவி கடத்தல்

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறையில் நேற்று நண்பகல் கல்லூரி மாணவி ஒருவர் காரில் வந்த இனந்தெரியாத நபர்களினால் கடத்தப்பட்டுள்ளதாக மாணவியின் தாயார் காங்கேசன்துறை பொலிஸில் புகார்செய்துள்ளார்.

இதுபற்றிக் கூறப்படுவதாவது:

காங்கேசன்துறை நடேஸ்வராக்கல்லூரியில் கல்விகற்கும் 14 வயதான மாம்பிராயைச் சேர்ந்த ஜமுனாராணி என்ற இந்த மாணவி நேற்றுப் பகல் போசனத்தை முடித்துக்கொண்டு பாடசாலைக்கு சென்றுகொண்டிருந்த போது வீதியில் திடீரென காரில் வந்த இனந்தெரியாத நபர்கள் இவரைக் கடத்திச் சென்றனராம்.

இம் மாணவியுடன் கூட வந்த மாணவிகள் ஜமுனாராணியின் தாயாரிடம் இது பற்றிக் கூறியதையடுத்து அவர் பொலிஸில் புகார் செய்துள்ளார். [இ]

வெஸ்லி
மானிப்பாய்
தினசரி 6-30, 9-30
எம். ஜி. ஆர்.
சரோஜாதேவி
திருடாதே

# தம்பிபேச்சுப் பிடிக்காத அண்ணன் உயிரைவிட்டார்!

[புலோலி]

''நானும் வயது வந்தவன். எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பது எனக்கும் தெரியும்'' என்று தம்பி அண்ணனைப் பார்த்துச் சொன்னாராம் இதனைக் கேட்ட அண்ணனோ மனமுடைந்து சுருக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டார் இச் சம்பவம் வல்வெட்டித்துறைப் பொலிஸ் பகுதியில் நடைபெற்றுள்ளது அருட்பெருஞ்சோதி (31) வயது என்பவரே இப்பரிதாபமுடிவைத் தேடிக்கொண்டவராவர் மரண விசாரணை அதிகாரி திரு எம் வி புவனேந்திரன் ஜே பி இவரது மரணம் சம்பந்தமான விசாரணையை மேற்கொண்டார் வல்வெட்டித்துறைப் பொலிசைச் சேர்ந்த மட்டின் ராஜபக்ஸ சாட்சியங்களை ஆஜர் செய்தார்

இறந்தவரின் தாயார் மாணிக்கரத்தினம் சாட்சியமளிக்கையில், காலஞ் சென்ற தமது மகன் கடைநடத்தி வந்ததாகவும், யாரும் எதிர்த்துப் பேசினால் கோபமடைவாரென்றும். சம்பவதினம் அவர் கடைக்குப் புறப்படும்போது வீட்டு வாசலில் சைக்கிள் நின்றதாகவும், இனிமேல் அந்தச் சைக்கிளை யாரும் தொடக்கூடாது என்று அவர் கூறவே வயது வந்த எனக்கு எப்படி நடக்க வேண்டுமென்று தம்பியார் சொல்லியதாகவும், பின்னர் தாம் சறிச்சாமான் வாங்கிப்போட்டுத் திரும்பிய போது அருட்பெருஞ்சோதி வீட்டினுள் கயிற்றில் சுருக்கிட்டுத் தொங்கிக்கொண்டிருந்ததாகவும், இறந்தவருக்குப் பணக்கஷ்டமோ எதிரியோ இல்லையென்றும் கூறினார்

வேறு சாட்சியங்களையும் மருத்துத் தற்கொலை என்று தீர்ப்பளிக்கப்பட்டது [அ]

## பருத்தித்துறை நகரசபை

# மின்சாரம் சீரமைக்க 90,000 ரூபா செலவிடுக

(புலோலி)

பருத்தித்துறை நகரசபையின் புதிய நிர்வாகம் பருத்தித்துறைப் பகுதியின் மின்சாரச்சீர்கேட்டைச் சீரமைப்பதுடன் நகரின் குப்பை கூழங்களை உடனடியாக அகற்றுவது என்றும் தீர்மானித்துள்ளது.

பருத்தித்துறை நகர சபைத் தலைவர் திரு. எம் வேலுப்பிள்ளையின் தலைமையில் நடைபெற்ற பருத்தித்துறை நகரசபையின் முதலாவது கூட்டத்தில் உபதலைவர் திரு. எஸ். வேல்முருகு சுயேச்சைக்குழுத் தலைவர் திரு மு பொ வீரவாகு, ஐ தே. கட்சியின் நகரசபை அங்கத்தவர் திரு இ. வ. சந்திரசேகரம் உட்பட ஒன்பது நகரசபை உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

இச்சபையின் முதலாவது கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்ட தீர்மானங்களாவன.

நகரில் உள்ள குப்பை கூழங்களை அகற்றுவதற்காக திருத்தியமைக்கப்பட்ட இரு உழவு இயந்திரங்களைக் கொள்வனவு செய்தல் அல்லது புதிய உழவு இயந்திரமொன்றை வாங்குதல், அதுவரை தற்பொழுது குப்பை கூழங்களை அகற்றி வரும் மூன்று வண்டில்களுடன் உழவு இயந்திரத்தை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளுதல்.

நகரப் பகுதியின் மின்சாரத்தைச் சீரமைத்து நகரை ஒளிமயமாக்க 90,000 ரூபா செலவிடுதல், முக்கியமாக மாதனை நெல்லண்டைப் பகுதி மின்சாரம் உடனடியாக சீர் செய்தல்.

''போக்குவரத்துக் கஷ்டத்தைப் போக்குமுகமாக சைக்கிள்களில் இருவர் செல்வதை அனுமதித்தல்.

''பருத்தித்துறை மீன்சந்தையிலும், பஸ் தரிப்புநிலையத்திலும் குழாய் நீர் விநியோகம் ஏற்படுத்துதல்.

''தம்பசெட்டி வீதி, நீதிவிதலவீதி, துப்டளை வீதி, விநாயகமுதலியார் வீதி ஆகியனவற்றைத் திருத்திப் புனரமைப்புச்செய்து தம்பசெட்டி வீதி மதகு கட்டுவதற்கு 21,500 ரூபா ஒதுக்கீடு செய்தல். [அ]

## சேவையாளன் வராத்துப்பளை விநாயகமூர்த்தி

நாட்டிற்கும் சமூகத்திற்கும் அரும்பணியாற்றி இவ்வுலகை நீத்த பெரியார்களை நாம் நினைவுகூரக் கடமைப்பட்டுள்ளோம் இப்பெரியார் வரிசைகளில் இடம்பெறவேண்டியவர்களுள் அமரர் வேலுப்பிள்ளை விநாயகமூர்த்தியும் ஒருவராவர்

பருத்தித்துறை வராத்துப்பளையைப் பிறப்பிடமாகக் கொண்ட அமரர் விநாயகமூர்த்தி இளமைப் பராயம் தொடக்கமே சமய, கலை, கலாச்சார, அபிவிருத்திகளில் அதிக அக்கறை செலுத்திவந்தார் தமது ஆரம்ப கல்வியை முடித்துக்கொண்டு மாத்தளை நகரிலே வர்த்தகத் தொழில் ஆரம்பித்த இவருக்கு இறைவன் அருளால் அத்தொழிலில் உயர்ச்சிகிடைத்தது வர்த்தகத் தொழில் மூலம் பெற்றுக்கொண்ட பணத்தின் பெரும் பகுதியை இப்பகுதியின் அபிவிருத்திக்கும் சமய கலை கலாச்சார வளர்ச்சிக்கும் செலவிட்டு வந்தார் வராத்துப்பளையிலே அம்மன் ஆலயம் ஒன்றை அமைத்து அவ்வாலயத்திற்குச் சிறப்பாக மகாகும்பாபிஷேகத்தைச் செய்த இவர், தொடர்ந்து வருடாவருடம் நடைபெறும் சகல உற்சவங்களையும் சிறப்பாகச் செய்து வந்தது இவரது சமயப்பணிக்கு சான்று பகரும்

இப்பகுதி இளைஞர்களின் முன்னேற்ற நடவடிக்கைகளில் அதிக அக்கறை காட்டி வந்த இவரை இப்பகுதி இளைஞர்கள் ஒன்று சேர்ந்து அமைத்துக் கொண்ட நல்நெறிக் கழகத்தின் போஷகராக ஏற்றுக் கொண்டனர் இவரது இளமை பொருந்திய உள்ளம் எப்பொழுதும் இப்பகுதி இளைஞர் அபிவிருத்தி விவகாரங்களிலும் சமூக, சமய, கலை,கலாச்சார விடயங்களிலுமே நாட்டங் கொண்டிருந்தது இவரது சேவையையும், பணிகளையும் மக்கள் மறந்துவிடமாட்டார்கள்

ஏ.என்.எஸ்.திருச்செல்வம்

## புதிய அதிபர்

[புலோலி]

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையின் உப-அதிபர் செல்வி எஸ் சுப்பிரமணியம் சேவையிலிருந்து இளைப்பாறியதனைத் தொடர்ந்து திருமதி எஸ். அருளையா பாடசாலையின் உப அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். [வ]

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

# திருமலை நகரசபை: சபைக் கொடியுடன்

## தேசியக் கொடியையும் ஏற்றவேண்டும்!

### யு. என். பி. உறுப்பினர் கோரிக்கை

[திருகோணமலை]

திருகோணமலை நகரசபைக்குச் சொந்தமான மணிக்கூட்டு கோபுரத்தில் 4-ந் திகதி முதல் பறக்க விடப்பட்டுள்ள சிங்கக்கொடி பற்றிய விசாரணையை நகரசபைத் தலைவர் திரு ஆ. வெற்றிவேலு சபைக் கூட்டத்தில் உறுப்பினர்களுக்கு விளக்கினர்.

நகரசபையின் முதலாவது கூட்டத்தில் தலைவர் திரு வெற்றிவேலு கூறியதாவது: சபைக்குச் சொந்தமான மணிக்கூட்டுக் கோபுரத்தில் யாரோ விஷமிகள் இரவோடு இரவாக சிங்கக்கொடியை ஏற்றி விட்டார்கள்.

பொலிசாரின் உதவியுடன் இக்கொடியை உடனடியாக இறக்கும்படி எனது தொழிற்பகுதி அத்தியட்சகருக்கு உத்தரவு பிறப்பித்தேன். இது பற்றி பொலிஸ் அதிபருக்கும் முறைப்பாடு செய்தேன். எனது தொழிற்பகுதித் தலைவரும் பொலிசில் முறைப்பாடு செய்தார்.

கொடி இறக்கும் பிரச்னையை தன்னிடம் விட்டு விடும்படியும், தான் எப்படி கொடி ஏற்றப்பட்டது என்பது பற்றி விசாரணை செய்து நடவடிக்கை எடுப்பதாக பொலிஸ் அதிபர் எனக்கு அறிவித்தார். பொலிஸ் அதிபர் தனது பதிலை தனிச்செயலகத்தில் அனுப்பியிருக்கிறார்.

நான் இச்சம்பவம் பற்றி உள்ளூராட்சி அமைச்சு செயலாளர், ஆணையாளர் ஆகியோரை சந்தித்து நேரில் முறையிட்டேன். அதற்குப் பொலிசாரின் உதவியுடன் கொடியை இறக்கலாம் தானே கூறினார்கள்.

பொலிஸ் அதிபரோ, எப்போதுதான் கொடியை இறக்குவார் என்பதை சொல்ல முடியாது என அறிவித்துள்ளார்.

திரு. ஆர். நவரத்தினம் (கூட்டணி) பேசுகையில், நகரசபைக்குரிய கட்டடத்தில் தலைவரின் அனுமதியின்றி எந்தக் கொடியையும் ஏற்ற முடியாதென்றும் உடனடியாக சிங்கக் கொடியை இறக்க வேண்டும் எனிருர்.

திரு. எஸ் பத்திரி (கூட்டணி) பேசுகையில், துவேஷ மனப்பான்மையுடன் கொடி ஏற்றப்பட்டிருப்பதாகக் கூறினர்.

அத்துமீறி ஏற்றப்பட்ட கொடியை முதலில் இறக்க வேண்டும் என்றும், அதன் பின் பொலிசார் விசாரணையை நடத்தட்டும் என்றும் அவர் கூறினர்.

திரு த. மாணிக்கவாசகர் (யூ என். பி) கொடிச்சம்பவம் பல பிரச்னைகளை உருவாக்கும் பல இன மக்கள் வாழும் நகரசபை அலுவலக கட்டிடத்தில் பறக்கவிடப்பட்டுள்ள கொடியும் எமது சொந்தக் கொடியல்ல தலைவர் இது எமது சொந்தக் கொடி, சபையின் கொடி.

டபிள்யூ விஜயசூரியா (யூ. என் பி) 1956ல் இருந்து இக்கொடிப் பிரச்னை நம்மத்தியில் பல அசம்பாவிதங்களை ஏற்படுத்தியுள்ளது இப்பிரச்னைமீது ஏன் நாம் இரண்டு குழுக்களாக நின்று வாதிட வேண்டும்.

மத்திய அரசிடம் உதவி பெறுவதால் சபைக்கொடியுடன் தேசியக்கொடியையும் ஏற்றவேண்டும் என திரு. விஜயசூரியா கூறியபோது இதுபற்றி பின்னர் முடிவு செய்வோம் என தலைவர் தெரிவித்தார். [க]

## உலக கிண்ணக் கிரிக்கெட்: இலங்கை தோல்வி

லண்டன், ஜூன் 11

உலக கிண்ணத்துக்கான கிரிக்கெட் போட்டியில் இலங்கைக்கோஷ்டியை நியூஸிலாந்து 9 விக்கட்டுகளால் வெற்றி பெற்றது

முதலில் ஆடிய இலங்கை 56 5 ஓவர்களில் சகல விக்கட்டுகளையும் இழந்து 189 ஓட்டங்களைப் பெற்றது. காப்டன் அனுரா தென்னக்கோன் 59 ஓட்டங்களையும் ரோய் டயஸ் 25 ஓட்டங்களையும் பெற்றனர்.

அடுத்து ஆடிய நியூஸிலாந்து 47.4 ஓவர்களில் 1 விக்கட்டை இழந்து 190 ஓட்டங்களைப் பெற்றது.

### மே. இந்தியா வெற்றி

இந்திய—மேற்கிந்திய ஆட்டத்தில் மேற்கிந்தியா 9 விக்கட்டுகளால் வெற்றி பெற்றது

முதலில் ஆடிய இந்தியா 53 1 ஓவர்களில சகல விக்கட்டுகளையும் இழந்து 190 ஓட்டங்களைப் பெற்றது.

குண்டப்பா விஸ்வநாத் 75 ஓட்டங்களைப் பெற்றார்.

மேற்கிந்தியா 51.3 ஓவர்களில் 1 விக்கட்டை இழந்து 194 ஓட்டங்களைப் பெற்றது. கோடன் கிறின்டிஜ் ஆட்டமிழக்காது 106 ஓட்டங்களைப் பெற்றார்.

### இங்கிலாந்து வெற்றி

இங்கிலாந்து — அவுஸ்திரேலிய ஆட்டத்தில் இங்கிலாந்து ஆறு விக்கட்டுகளால் வெற்றி பெற்றது.

முதலில் ஆடிய அவுஸ்திரேலியா 60 ஓவர்களில் 9 விக்கட்டுகளை இழந்து 159 ஓட்டங்களை பெற்றது. ஹில்டிச் 47 ஓட்டங்களைப் பெற்றார்.

அடுத்து ஆடிய இங்கிலாந்து 47·1 ஓவர்களில் 4 விக்கட்டுகளை இழந்து 160 ஓட்டங்களைப் பெற்றது. ஹூச் ஆட்டமிழக்காது 55 ஓட்டங்களைப் பெற்றார்.

### பாகிஸ்தான் வெற்றி

பாகிஸ்தான்—கனடா ஆட்டத்தில் பாகிஸ்தான் 8 விக்கட்டுகளால் வெற்றி பெற்றது

முதல் ஆடிய கனடா 60 ஓவர்களில் 9 விக்கட்டுகளை இழந்து 139 ஓட்டங்களைப் பெற்றது.

பாகிஸ்தான் 401 ஓவர்களில் 2 விக்கட்டுகளை இழந்து 140 ஓட்டங்களைப் பெற்றது. [ஜ]

மன்னாரில் கூடும் எழுதுவினைஞர் சங்கம்

## நீதிபரிபாலனத்தை தமிழில் நடத்தக் கோரிக்கை

[மன்னார்]

அரசாங்கத்தால் பிரகடனப் படுத்தும் மொழிக்கொள்கைகளை அமுல் நடாத்துவதில் ஏற்படும் காலதாமதத்தை வைபிட்டு விசனப்படுத்தலுடன் வடக்கு கிழக்கு மாகாணங்களில் நிர்வாகத்தை அரசியல் யாப்பின் பிரகாரம் தமிழில் நடாத்துவதற்கு தகுந்த நடவடிக்கையை உடனடியாக எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்வதுடன் நீதி பரிபாலனத்தை தமிழில் நடத்தத்தகுந்த நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென்றும் கோரும் பிரேரணை ஒன்று எதிர் வரும் 14-ந் திகதி வியாழக்கிழமை மன்னார் கச்சேரியில் நடைபெறவுள்ள அரசாங்க எழுதுவினைஞர் சங்க மன்னார்க்கிளையின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் கொண்டு வரப்படவுள்ளது மன்னார்க்கிளைத் தலைவர் திரு. சீ. துரைசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இக் கூட்டத்தில் பல பொருட்களின் விலை கட்டுப்பாட்டிலிருந்து நீக்கியதால் கள்ளச் சந்தைக்காரர்கள் தமிஷ்டம்போல் பொருட்களின் விலையை கூட்டி கொள்ளலாபம் பெறுகின்றனர். பட்டினியிலிருந்து நாட்டுமக்கள் காப்பாற்றப் படுவதற்காக தெரிவு செய்யப்பட்ட அரசாங்கத்தில் பொருட்களின் விலைகள் நாளுக்கு நாள் கூடிக்கொண்டே வருவதால் நடுத்தர வர்க்கத்தினரான எழுதுவினைஞர்கள் நாளாந்த ஜீவியத்தை கொண்டு செல்லுவது மிகவும் கஷ்டமாகவுள்ளதால் உடனடியாக அடிப்படைச் சம்பளத்தில் 150 ரூபாவைக் கூட்டிக் கொடுக்கவேண்டும் என்று அரசைக் கோரும் தீர்மானம் ஒன்றும் பிரேரிக்கப்படவுள்ளது. [கு]

## நடனத்தில் முதலிடம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர்ப்பகுதி சங்கீத, நடன, நாடகப்போட்டி கடந்த வாரம் யாழ் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்றபோது கொக்குவில் நாமகள் வித்தியாசாலை நடன ஆசிரியை செல்வி சேலஸ்தி செல்லையாவின் மாணவிகள் கனிஷ்டபிரிவில் (நாட்டிய நாடகம்) முதல் பரிசு பெற்றனர். இதே போட்டியில் குழு நடனத்திலும் (புதிய ஆக்கம்) இந்த மாணவிகள் முதலாம் இடத்தைப் பெற்றனர்.


கைதடி கிராமசபை

## கேள்வி விளம்பரம்

### இரட்டை வீடுகள் அமைத்தல்

மேற்படி வேலைக்கு 29-05-79ல் ஈழநாடு பத்திரிகையில் செய்யப்பட்ட விளம்பரத்தில் குறிப்பிட்ட கேள்விப்பத்திரங்களை வழங்கும் கடைசித் திகதி 20-06-79-ந் திகதி நண்பகல் 12-00 மணி வரையும், கேள்விகள் ஏற்கும் திகதி 21-06-79-ந் திகதி காலை 10-00 மணி வரையும் நீடிக்கப்பட்டுள்ளது

இரட்டை வீடுகள் என்பது இரண்டு ஒற்றை வீடுகளைக் குறிக்கும்.

A. மகாதேவா,
விசேட ஆணையாளர்,
கிராமசபை,
கைதடி.

கிராமசபை பணிமனை,
கைதடி,
10-05-79. 2732


## கனிவளம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சுந்தரலிங்கம் பாடி வழங்கினர் அவருக்கு 'தமிழ் அண்ணல்' என்ற பட்டமும் வழங்கிக் கௌரவித்தனர்.

பேராசிரியர் அழகப்பன் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:-

"ஒருநாள் ஒரு பெண்ணை அழைத்துவந்த பாரதிதாசன் இவன் ஏதோ தேவை என்று கேட்கிறன் என்றார், நான் கேட்டபோது அவள் கூறினள் பொன்வேண்டாம், பொருள் வேண்டாம், உடைவேண்டாம், வீடுவேண்டாம் என்று அப்போ என்ன வேண்டும் என்று நான் கேட்டபோது 'முத்தமிழ் கற்ற அத்தான் வேண்டும்' என்று கேட்டாள் அந்தப்புதுமைப் பெண். எவனொருவன் திருக்குறளை முழுதாகக்கற்றிருக்கிறானோ அவனே முத்தமிழ் கற்றவன் என்று நான் கூறினேன் முத் தமிழும் ஒரு நூலிலே இருக்கிறது என்றால் அது திருக்குறள் ஒன்று தான், எந்த ஒருவன் திருக்குறளைக்கற்றிருக்கிறானோ அவனையே முத்தமிழ் கற்ற ஒருவனாக நான் கருதுவேன்.

### பெண்களும் மதுவும்

'தேன் குடித்தது போலிருந்தது நான் குடித்த கள்' என்று ஔவை கூறியதிலிருந்து அந்தக்காலத்திலே பெண்களும் மது அருந்தினார்கள் என்பதை நாம் அறியக்கூடியதாகவிருக்கின்றது வள்ளுவனின் காலத்தில் ஆண்களும் பெண்களும் மது அருந்தினார்கள். அவர்களை மது அருந்தாதே என்று முதன்முதலில் கூறியவன் வள்ளுவனே

### புலாலுண்ணாமைக்கு போர்க்கொடி தொடுத்த முதல்வன்

'வயிறு என்ன சுடுகாடா' என்று கேட்டு மாமிசத்தைச் சாப்பிடக்கூடாது என்று முதன் முதலில் புலால் உண்ணாமைக்காகப் போர்க்கொடி உயர்த்தியவனும் வள்ளுவனே.

மது, மாது, மாமிசம் என்பவற்றுக்கு எதிராக முதலில் போர்க்கொடி உயர்த்திய வள்ளுவனுக்கு வருடந்தோறும் தமிழ்மறைக்கழகம் விழா எடுத்து வருவது மகிழ்ச்சியளிக்கிறது.

தமிழாய்ந்த தமிழறிஞன் தமிழ்நாட்டின் முதலமைச்சராதல் வேண்டும். தமிழ்நாட்டிலுள்ள பெயர்ப்பலகைகள் எல்லாம் தமிழில் இருக்கவேண்டும் என்று சீரிய நற்கருத்துக்களைப் பாரதி கூறியதுபோன்று தமிழ்மறைக்கழகமும் நல்ல தமிழ் உணர்வுகளை மக்களுக்கு ஊட்டவேண்டும்.

மனிதன் தெய்வமாகலாம் என்ற கருத்தை எடுத்துக்காட்டிய திருக்குறள் பொதுவுடைமைக் கருத்துக்களைக்கொண்ட ஒரு நல்ல நூல் வாழ்க்கையை எல்லாமட்டத்திலும் காட்டும் வாழ்க்கை நூலான திருக்குறளைவிட நல்ல நண்பனாக வேறுயாரும்இருக்கமுடியாது"

### ஒவ்வொரு ஆண்டும் நினைவுகூருதல் வேண்டும்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ் விரிவுரையாளர் கலாநிதி அ. சண்முகதாஸ் 'வள்ளுவனின் எதிரெதிர்க் கருத்துக்கள்' என்ற தலைப்பில் உரையாற்றுகையில் கூறியதாவது: "வள்ளுவன் பிறந்ததால் தமிழ்நாடே புகழ்பெற்றது என்று பாரதியார் கூறினார். தமிழ்மக்களுக்கும்தமிழ் நாட்டுக்கும் தமிழுக்கும் பெருமை தருகின்ற திருக்குறளைத் தந்த வள்ளுவனை ஒவ்வொரு ஆண்டும் நினைவு கூரவேண்டியது அவசியம். சாதாரண மக்கள் திருக்குறளை நினைப்பார்கள் என்று நாம் கருதவது தவறு. அந்தவகையில் தமிழ்மறைக் கழகத்தினர் ஆண்டுக்கு ஒரு தடவையாவது வள்ளுவனின் கருத்துக்களைப் பரப்பக்கூடியவகையில விழா எடுத்துவருவது அவசியம் எதிரெதிராக இருந்தவற்றை ஒன்றிணைத்ததால்தான் உலகெல்லாம் பரவும் சிறப்பைப் பெற்றது திருக்குறள்.

"கல்வி ஒழுக்கம். அறநெறிகளில் சிறந்தவர்களையே சான்றோர் என்று நாம் கூறுவோம் ஆனல் அன்றைய காலத்திலே வேல் ஒன்று கொண்டு யானையின் முகத்தில் எறிந்து புறமுதுகு காட்டாமல் நிற்பவனையே சான்றோன் என்றார்கள். வீரர்களையே சான்றோர்கள் என்று போற்றியதால் போர்கள் நடந்தன மனிதர்கள் மிருகங்களைப் போல கொல்லப்பட்டபோது போர்கள் மறையவேண்டும் என்று வள்ளுவன் எழுதிய நூல்தான் திருக்குறள்.

"சைவமும் பௌத்தமும் தமிழ்நாட்டில் பரவும் வேளையில் போற்றவேண்டியவற்றைப் போற்றி போக்க வேண்டியவற்றைப் போக்கவே திருக்குறளைப் படைத்தார். பொருள் வேண்டும் என்றும் அருள்வேண்டும் என்றும் எதிரெதிராக் கருத்துக்கள் தோன்றவேண்டியதற்கு அப்போதைய சமுதாயமும் காமமும்தான் காரணமாயிருந்தது. எதற்கும் முக்கியத்துவம் கொடுக்கமுடியாதிருந்தால்தான் அப்படியான கருத்துக்கள் தோன்றவேண்டியிருந்தது.

"வள்ளுவனும் இக்காலப் பெண்களும் என்ற தலைப்பிலே திருமதி மனோன்மணி சண்முகதாஸ் பேசுகையில், "வள்ளுவன் காலத்தில் வாழ்ந்த பெண்களுக்கும் இன்றைய பெண்களுக்கும் வேறுபாடு உண்டு என்று சிலர் கருதலாம். பெண்களுடைய வாழ்வில் மாற்றங்கள் ஏற்பட்டு விட்டபோதும் அவர்களுடைய உணர்வுகள் மாறுபடவில்லை. அதிலும் கிராமியப் பெண்கள் வள்ளுவன் அன்று கண்ட பெண்களாகவே வாழ்ந்து வருகிறார்கள்'' என்றார்.

யாழ் பல்கலைக்கழக நூலகர் திரு ஆ. சிவநேசச்செல்வன், கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு. சுவ சொக்கலிங்கம், திரு நடராஜா, நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. செந்திவடிவேல் ஆகியோரும் உரையாற்றினர். திரு க. சொக்கலிங்கம் (சொக்கன்) தலைமையில் 'வள்ளுவன் காட்டிய பொருளியல் பாதை பொதுவுடமை' என்ற தலைப்பில் பட்டிமன்றமும் திரு வே சுப்பிரமணியம் (முல்லைமணி) தலைமையில் கவியரங்கமும் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. [கு-அ]


## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ளதும், புதிய நம்பர் வராததும், இங்கிலாந்திலிருந்து இறக்குமதி செய்ததுமான, ஒஸ்டின் கேம்பிறிஜ் - 55 கார் உடன் விற்பனைக்குண்டு

விபரங்களுக்கு: 42/3, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். 2735


## பிரஷ்னேவ் நேரில் வந்து வரவேற்றார்

மாஸ்கோ ஜூன் 11

ரஷ்யாவில் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றைமேற்கொண்டு இன்று மாஸ்கோ வந்துசேர்ந்த இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் விமான நிலையத்தில் அன்புடன் வரவேற்கப்பட்டார்.

சோவியத் அதிபர் திரு பிரஷ்னேவ், பிரதமர் திரு கொஸிஜின் ஆகியோரும் மற்றும் பலரும் தேசாயை விமானநிலையத்தில் வரவேற்றனர். [இ]

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவகோவில் மேற்கு வீதி 68ம் இலக்க அச்சகத்தில் 1979-ம் ஆண்டு ஜூன் மாதம் 12-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No QB/89/5 3 The Eelanaadu P B No! 49, Telegram: Eelanaadu Tel: 489.